இயக்குநர்கள், நிர்வாகிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசுக்கு புகார் வந்துள்ளதா ?

(ஆ) அதுகுறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் கூட்டுறவு சட்ட விதிகளுக்கு முரணாக இயக்குநர்கள்—நிர்வாகிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசுக்கு புகார் எதுவும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நெசவாளர் பட்டு கூட்டுறவுச் சங்கத்தில் ஏராளமாக முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் இதேபோன்ற இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் கொள்முதல் செய்ததில் கடந்த காலத்தில் ஏராளமான ஊழல் நடைபெற்றிருப்பதாகவும் புகார் அரசுக்கு வந்திருக்கிறது. அது குறித்து ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் ஏற்பட்ட அந்த நிர்வாகச் சீர்கேடு சம்பந்தமாக திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் அந்தப் பணி ஆய்வில் இருக்கிறது. விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விசைத்தறி நெசவாலை.

*8576—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையத்தில் கூட்டுறவு முறையில் விசைத்தறி நெசவாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடையம் ஊராட்சி ஒன்றியப் பகுதியைப் பொறுத்த அளவில் அங்கே எந்தவிதமான தொழிற்சாலைகளும் கிடையாது. அங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி இருக்கின்றனர். விவசாயம் பொய்த்த காலங்களில் அங்கே வேலை இல்லாத் திண்டாட்டம் நிலவி வருகின்றது. அங்கே கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆகவே அந்த முடிவை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா விசைத் தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தைப் பொறுத்தது. நெல்லை மாவட்டத்தில் ஏற்கெனவே சங்கரன் கோவிலில் அந்த நெசவாளர் சங்கம் செயல்பட்டுக கொண்டிருக்கிறது. அதைப்போல வீரவநல்லூரிலும் 1984ம ஆண்டு முதல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலப்பாளையத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கம் விசைத்தறிக் கூடம கட்டுமானப் பணி இருக்கின்ற காரணத்தால் விரைவிலே அங்கே தொடங்க இருக்கின்றது. மேற்கொண்டு அந்த மாவட்டத்தில் மீண்டும் நூற்பாலை துவங்குவதற்கு தற்போது வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடையம் அருகே உள்ள வீரவநல்லூர் கூட்டுறவு நூற்பாலையில் ஆட்களைத் தேர்வு செய்வதற்காக கடந்த ஓராண்டுக்கு முன்பாக செய்தித் தாள்களிலே விளம்பரம் செய்யப்பட்டது. ஏராளமான பேர் மனுச் செய்தும் இன்றுவரை நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவில்லை; மாறாக நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாமல் அங்கே ஆட்கள் நியமனம் செய்யப்படுவதாகப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதை அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரவல்லூர் விசைத்தறிக் கூடத்தில் 20 தறிகள் இயங்காமல் இருந்தன. அவைகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுத்து முறைப்படி நேர்முகத் தேர்வு மூலம்தான் அவர்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.